தமிழ்நாடு அரசு

சுருக்கம்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை – 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகள் – பனைமரம், ஈச்சமரம் மற்றும் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் உற்பத்தி செய்யவும் 2013–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் 2015–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (8) துறை

அரசு ஆணை(நிலை) எண்: 65 நாள்:28.12.2012.

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.77, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(8) துறை, நாள் 16.12.2009.
2. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம், சென்னை கடிதம் ந.க. எண். 792/ப.வா.-3/2012, நாள் 06.11.2012.
3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் கடிதம் எண்.ம.ஆ.10(4)/25881/2012 நாள் 28.11.2012.

---

ஆணை:

1939-ம் ஆண்டு தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகளில், விதி எண்.5–ன்படி, தமிழ்நாடு அரசு அனுமதியுடன் பனைமரம், ஈச்சமரம் மற்றும் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கும் அளிக்கப்படும் உரிமம் மற்றும் அனுமதி அதனை வழங்கிடும் நாள் முதல் ஓராண்டு கால அளவுக்கு மட்டும் வழங்கப்படலாமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், ஜனவரித் திங்கள் முதல் டிசம்பர் திங்கள் முடியவுள்ள ஓராண்டு காலத்திற்கு மட்டும் ஒவ்வொரு ஆண்டும் உரிமம் நீட்டித்து வழங்கப்பட்டு வருகிறது. கடைசியாக, பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசு ஆணை (நிலை) எண்.77, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(8) துறை, நாள் 16.12.2009–இல் பனைமரம், ஈச்சமரம் மற்றும் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கான உரிமத்தினை 1.1.2010 முதல் 31.12.2012 வரை நீட்டித்து வழங்க ஆணையிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் கண்டுள்ள கடிதத்தில், தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் பனைமரம், ஈச்சமரம் மற்றும் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும்,

//த.பி.பா.//

பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கும் ஏற்றவாறு மேலே பத்தி ஒன்றில் வழங்கியுள்ள உரிமத்திற்கான அனுமதியை 1.1.2013 முதல் 31.12.2015 வரை மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து அரசு ஆணை வழங்குமாறு கோரியுள்ளார். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரும் உரிமத்தை புதுப்பிக்குமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்குறிப்பினை ஏற்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், பனைமரம், ஈச்சமரம் மற்றும் தென்னை மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்த்து எடுத்துச் செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் காய்ச்சுவதற்கான உரிமத்தினை 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகளின் விதி எண்.5 இனைத் தளர்வு செய்து 1.1.2013 முதல் 31.12.2015 வரை மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நீட்டித்து வழங்க ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப்பி.ஜி. தியாகராஜன்
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்

தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்,
குறளகம், ஐந்தாம் தளம், சென்னை–600 108
மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், சென்னை–5
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை–10,
காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை–4
காவல் துறைத் தலைவர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) சென்னை–2
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள்.

நகல்

கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–9
மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
இருப்புக்கோப்பு/உபரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

/Translation/

**GOVT. OF TAMIL NADU**

**CIRCULAR**

Orders issued on extraction of Neera / Palm Sap - Marketing, transportation , Manufacture of Palm Jaggery from Coconut, Palmyra and date palm - extension for a period of 3 years from January 2013 to December 2013 under Tamil Nadu, Neera and Palm Sap Rules 1939.

---

Home – Prohibition and Excise (8) Dept.

Govt. orders (Standing ) No.65 dated 28.12.12

Read:

1. Govt. order standing No.77, Prohibition and Excise (8) Dept. dated 16.12.2009.
2. Lr.No.K.No.792/P.V 3/2012 dated 06.11.12 of Tamil Nadu Palm Products Development Board.
3. Letter No.M.A.10(4)/25881/2012 dated 28.11.12 of Commissioner of Prohibition and Excise.

Orders:

As per the Act No.5 of TN Neera and Palm Sap Rules 1939, it has been mentioned that orders and permission of the Govt. of Tamil Nadu has been issued for a period of one year for extraction of palm sap from palmyrah tree, date tree and coconut tree, its marketing, transportation and production of jaggery from the sap. Accordingly, every year from January to December for a period of one year, orders are being extended and issued. Finally, as per the reference No.1, Govt. order (standing) No.77, Prohibition and Excise (8) Dept. dated 16.12.2009 orders have been issued and extended for the period from 01.01.2010 to 31.12.12 for extraction of sap from palmyrah, date palm and coconut, its marketing, transportation and production of jaggery from the sap.

2. As per the reference cited No.2, the Chief Executive Officer, Tamil Nadu Palmyrah Products Development Board has requested the Govt. to extend orders and permission for another 3 years from

01.01.2013 to 31.12. 2015 in continuation of the orders issued as per para-1 for the extraction of sap from palmyrah. date tree, coconut tree, its marketing, transportation and manufacture of jaggery products from the sap. In this regard, the Commissioner of Prohibition and Excise has also recommended and requested the Govt. to renew and extend the orders.

The recommendations of the Tamil Nadu Palm products Development Board is hereby accepted, the Act No.5 of 1939, TN, Neera and palm sap has been relaxed and orders are issued for extraction of palm sap from palmyrah, date tree, coconut , its marketing, transportation and production of jaggery from 01.01.2013 to 31.12.2015 in all districts of Tamil Nadu.

/By orders of Governor/

P.G. Thiagarajan
Dy. Secretary to Govt.

To

1. Chief Executive Officer, TN Palmyrah Products Development Board, Kuralagam, 5th Floor, Chennai – 108
2. Commissioner of Prohibition and Excise, Chennai -5
3. Registrar of Co-operative Societies, Chnnai-10
4. Director General of Police, Chennai -4
5. I.G. of Police (Law & order), Chennai -2
6. All District Collectors
7. All District Supdt. Of Police

Copy to:

1. Dept. of Handlooms & Khadi, Chennai -9
2. Office of Hon'ble Minister of Handloom, Khadi, Rural Industries, Chennai -9
3. O/o. Hon'ble Minister of Electricity, Excise & Prohibition , Chennai -9
4. Existing Files / Additional copies

// Sending as per the orders //

Sd/-

Section officer